# விழுப்புரம் நகராட்சி

2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி திங்கட்கிழமை காலை **10.15** மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற “**சாதாரண கூட்ட**” நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **சா.லட்சுமி, எம்.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப்பொருள்

**1.** விழுப்புரம் நகராட்சியானது 42 வார்டுகளை கொண்ட தேர்வு நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 33.13 ச.கி.மீ ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,40,714 ஆகும். இந்நகராட்சியில் தினசரி **67** டன் திடக்கழிவு உருவாகிறது. இந்த திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அய்யங்கோயில்பட்டில் சுமார் **5** ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செய்ய தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) **2016–17–**ன் கீழ் **9** இடங்களில் கீழ்க்கண்டவாறு நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணிக்கு ரூ.**468.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை கடிதம் எண்.29014/P3/2016, நாள்.**22.02.2018** தேதிய செயல்முறை உத்தரவில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.01, எல்லீஸ்சத்திரம் E.S கல்லூரி அருகில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |
| 2 | வார்டு எண்.27, வழுதரெட்டி மந்தைவெளியில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |
| 3 | வார்டு எண்.28, சாலாமேடு அண்ணாநகரில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |
| 4 | வார்டு எண்.38, எருமணந்தாங்கல் STP Site அருகில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |
| 5 | வார்டு எண்.38, காகுப்பம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |
| 6 | வார்டு எண்.38, எருமணந்தாங்கல் மருத்துவ கிராம நகர் பூங்காவில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |
| 7 | வார்டு எண்.41, அனிச்சம்பாளையத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | **52.00** |

| | | |
|---|---|---|
| 8 | வார்டு எண்.39, TNHB OSR இடத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | 52.00 |
| 9 | வார்டு எண்.39, கீழ்பெரும்பாக்கத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | 52.00 |
| | **மொத்தம்** | **468.00** |

இதனை தொடர்ந்து விழுப்புரம் நகராட்சியில் **9** இடங்களில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொதுமக்கள் தங்கள் பகுதியில் சுகாதார கேடு ஏற்படும் என கருதி கடும் எதிர்ப்பை தெரிவித்து சாலைமறியலில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு திட்டத்தின் அவசியம் எடுத்து கூறியும் தங்களது எதிர்ப்பினை தெரிவித்ததால் பணியின் அவசியம் கருதி கீழ்க்கண்ட இடங்களில் தேர்வு செய்து இடமாற்றம் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மாற்று இடங்களில் நுண்உர செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிர்வாக அனுமதி பெறப்பட்ட இடம் | தற்போது தேர்வு செய்யப்பட்ட மாற்று இடம் |
|---|---|---|
| **(ஒப்பந்ததாரர். திருமதி. R.சிவகாமி)** | | |
| 1 | வார்டு எண்.27, வழுதரெட்டி மந்தைவெளியில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | வார்டு எண்.03, Slaughter House அருகில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. |
| 2 | வார்டு எண்.38, காகுப்பம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | வார்டு எண்.10, காமராஜர் நகராட்சி உயர்நிலை பள்ளி வளாகத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. |
| 3 | வார்டு எண்.38, எருமணந்தாங்கல் மருத்துவ கிராம நகர் பூங்காவில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | வார்டு எண்.28, பொன்னேரியில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. |
| **(ஒப்பந்ததாரர். திரு.J.முருகன்)** | | |
| 4 | வார்டு எண்.39, TNHB OSR இடத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | வார்டு எண்.14, நாயக்கன் தோப்பு பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. |
| 5 | வார்டு எண்.39, கீழ்பெரும்பாக்கத்தில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. | வார்டு எண்.38, காகுப்பம் (Near STP Site) அருகில் நுண் உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்கும் பணி. |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மாற்று இடங்களில் நுண்உர செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். மன்ற தீர்மானத்தினை பின்னேற்பு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

**(8887/2017/இ1)**

**தீர்மான எண்.1314 , நாள்.31—12—2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**2.** விழுப்புரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான பூந்தோட்டம் கிராமம் சர்வே எண்.219/2—ல் 0.81.0 ஹெக்டர் அளவில் திருமண மண்டபம் கட்ட தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோர நகர்மன்றத் தீர்மானம் எண்.1026, நாள்.29.06.2018—ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி கோரப்பட்டது. இந்நிலையில் மேற்படி பகுதி நகரின் பிரதான வியாபார பகுதியாக உள்ளதால் திருமண மண்டம் கட்டுவதைவிட பல்நோக்கு வணிக வளாகம் அமைத்தால் நகராட்சிக்கு பலமடங்கு வருமானம் வரவாய்ப்புள்ளதால் மேற்படி பகுதியில் பல்நோக்கு வணிக வளாகம் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2100.00 இலட்சத்தை தனியார் பங்களிப்புடன் (Under PPP Mode DBFOT Based) செயல்படுத்தவும் அரசின் அனுமதி பெற மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(5554/2018/இ1)**

**தீர்மான எண்.1315 , நாள்.31—12—2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**3.** இந்நகராட்சியில் எதிர்வரும் 01.01.2019 அன்று பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு அரசாணை எண்(எம்.எஸ்) 84 சுற்றுசூழல் மற்றும் வனத்துறை (இசி2) நாள்.25.06.2018 அதன்படி தடை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட பேரணிகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் **மாண்புமிகு சட்டம், நீதிமன்றம், சிறைச்சாலைகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்** தலைமையில் நடத்தப்பட உள்ளதால் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7.00 லட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1316 , நாள்.31—12—2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**4.** ஒருமுறை பயன்படுத்தி துாக்கி எறியப்படும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்று பொருள் குறித்து 31.12.2018 அன்று அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கண்காட்சி மற்றும் பேரணி நடத்த கீழ்கண்ட விவரப்படி பணியினை மேற்கொள்ள நகராட்சி ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| S. No | Particulars | Company Name | | |
|---|---|---|---|---|
| | | K.RAJA CONSTRUCTION VILLUPURAM | SRI IYYANAR CONSTRUCTIO N VILLUPURAM | SSV DEVELOPERS CONSTRUCTION VILLUPURAM |
| | | Rs. | Rs | Rs. |
| 1 | விழா மேடை அமைத்தல் | 27000 | 27950 | 28000 |
| 2 | விழா பந்தல் மற்றும் கண்காட்சி அரங்குகள் அமைத்தல் | 178000 | 180000 | 195000 |
| 3 | விழா பேனர் அமைத்தல் | 67000 | 67500 | 65000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | பேரணி ஊர்வலம் ஊர்தி அமைத்தல் | 46000 | 48000 | 49500 |
| 5 | பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்திட ஆட்டோ ஒலிப்பெருக்கி விளம்பரம் செய்தல் | 23000 | 25000 | 26000 |
| 6 | பிளாஸ்டிக் பொருளுக்கு மாற்று பொருள் குறித்தான விழிப்புணர்வு பதாகைகள் மல்டி கலர் நோட்டீஸ் கண்காட்சி பொருட்கள், கைபைக பேரணி அடையாள அட்டை | 167000 | 168500 | 178000 |
| 7 | விழாவிற்கு பங்குபெறும் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள் மற்றும் இதர பணியாளர்கள் 600 நபர்களுக்கு உணவு தேநீர் பிஸ்கட் வழங்கதல் | 86000 | 88500 | 88000 |
| 8 | கலைநிகழ்ச்சி | 24000 | 26500 | 27500 |
| 9 | புகைப்படம் | 27000 | 29000 | 29500 |
| 10 | விழாவிற்கு தேவையான பூக்கள் மற்றும் வரவேற்ப்பு பூங்கொத்துகள் | 32000 | 34500 | 34000 |
| | **மொத்தம்** | **677000** | **695450** | **720500** |

<u>அலுவலக குறிப்பு:–</u>

மேற்கண்ட அனைத்து இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள K.RAJA CONSTRUCTION VILLUPURAM என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். பணியின் அவசியம் அவசரம் கருதி மேல்நடவடிக்கையை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1317 , நாள்.31–12–2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**5.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02, VGP நகரில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை அந்த பகுதியிலேயே உரமாக்கும் மையம் (Onsite Composting Centre) கட்டும் பணி ரூ.4.40 இலட்சத்தில் மேற்கொள்ள நகர மன்ற தீர்மான எண்.1028, நாள்.29.06.2018–ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திருமதி.S.சிவகாமி, ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. இந்நிலையில் பணி துவங்கப்பட்ட போது அப்பகுதி மக்கள் பணியினை தடுத்து வீன் தகராறு செய்ததால், திட்டப்பணி அவசியம் கருதி வார்டு எண்.27, வழுதரெட்டி சமுதாயக் கழிப்பறை அருகில் மையம் அமைக்கும் பணி செயல்படுத்த மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூய்மைப் பணி அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று திட்டப் பணியினை இடமாற்றம் செய்து நடவடிக்கை எடுத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4093/2018/இ1)**

**தீர்மான எண்.1318 , நாள்.31–12–2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**6.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, மேட்டுத் தெரு சாலை குண்டும், குழியுமாக உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால், அச்சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றியமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.75 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொதுமக்களின் போக்குவரத்து நலனை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(9523/2018/இ1)**

**<u>தீர்மான எண்.1319 , நாள்.31–12–2018</u>**

அனுமதி வழங்கப்படுகிறது.

**7.** விழுப்புரம் நகராட்சியின் வார்டு எண்.**30**–ல் ஊரல் கரைமேடு அங்கன்வாடி மையம் எதிரில் உள்ள சந்து சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை ரூ.**1.10** இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலையாக அமைக்க தனி அலுவலரின் **05.11.2018**–ந் தேதிய அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **11.12.2018**–ந் தேதியன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் & விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | 105957 | –0.02% குறைவு |
| 2 | திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | 107160 | 1.11% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.02%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(9131/2018/இ1)**

**<u>தீர்மான எண்.1320 , நாள்.31–12–2018</u>**

அனுமதி வழங்கப்படுகிறது.

**8.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**30**–ல் ஊரல் கரைமேடு பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தினை ரூ.**1.80** இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் **05.11.2018**–ல் முன்அனுமதி வழங்கியதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **11.12.2018** அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் & விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | 175768 | –0.05% குறைவு |
| 2 | திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | 177375 | 0.86% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட **0.05%** குறைவாக உள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(9020/2018/இ1)**

**<u>தீர்மான எண்.1321 , நாள்.31–12–2018</u>**

அனுமதி வழங்கப்படுகிறது.

**9.** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தினசரி சேகரமாகும் அந்தந்தப் பகுதி குப்பைகளை அதே இடத்தில் உரமாக்கல் செய்யும் விதமாக இராஜீவ் காந்தி நகர் பகுதியில் (Onsite Composting Structure) மையம் அவசிய அவசரம் கருதி சட்ட விதி **15–**ன் கீழ் ரூ.**1,64,811/–**ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(5713/2018/இ1)**

**<u>தீர்மான எண்.1322 , நாள்.31–12–2018</u>**

பதிவு செய்யப்படுகிறது.

**10.** இந்நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு பாண்டி ரோட்டில் உள்ள ஆணையர் அவர்களின் குடியிருப்பில் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் வர்ணம் பூசுதல், மரத்தாலான கதவு ஜன்னல்கள் பழுதானதை மாற்றி புதியதாக பொருத்துதல், மின்சாதன பணிகள் போன்றவற்றை செய்து முடிக்க நகராட்சி சட்ட விதி **15–**ன் கீழ் ரூ.**2,95,576/–**ஐ நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவு மேற்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(7281/2018/இ1)**

**<u>தீர்மான எண்.1323 , நாள்.31–12–2018</u>**

பதிவு செய்யப்படுகிறது.

**11.** விழுப்புரம் நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் இயங்கி வந்த சுகாதார வார்டு ஆபிஸ் பழைய கட்டிடத்தை இடிக்கப்பட்டு அப்பேருந்து நிலையத்திலேயே உள்ள மின் இணைப்பு இல்லாத புதிய கட்டிடத்தில் சுகாதார வார்டு ஆபிஸ் இயங்குவதால் தற்பொழுது இக்கட்டிடத்திற்கு புதிய மின்இணைப்பு பெறுவதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**6000/–**த்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(      /2018/இ2)**

**<u>தீர்மான எண்.1324 , நாள்.31–12–2018</u>**

அனுமதி வழங்கப்படுகிறது.

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய வளாகம் சுற்றுச்சுவர் பாதுகாப்பில்லாததால் தனியார் வாகனங்கள் பிரவேசிப்பதாலும் சுற்றியுள்ள தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்கும் விதமாகவும், பேருந்து பயணிகள் பாதுகாப்பு கருதியும் புதிய சுற்றுச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**7.20** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. போக்குவரத்து மற்றும் பயணிகள் நலனை முற்றிலும் கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(9538/2018/இ1)**

<u>தீர்மான எண்.1325 , நாள்.31–12–2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**13.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற உள்ளதால் பேருந்துகள் மற்றும் பேருந்து பயணிகளின் பாதுகாப்பு கருதி தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**19.50** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(10598/2018/இ1)**

<u>தீர்மான எண்.1326 , நாள்.31–12–2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**14.** விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் **33** வார்டுகளில் செயல்படுத்தப்பட்டு கழிவுநீர் வெளியேற்றி சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக வடக்கு தெரு கழிவுநீர் ஊந்து நிலையம் மூலம் ஊந்தப்பட்டு எருமணந்தாங்கல் கழிவுநீர் சுத்திகரிக்கப்படும் இடத்திற்கு கழிவுநீர் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், இக்கழிவுநீர் கிணற்றில் தூர்வாரி இரும்பு கிரில் மூடி பொருத்துதல், சுற்றுசுவர் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**38,000/–**க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், மேற்காணும் செலவினம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(9545/2018/இ3)**

<u>தீர்மான எண்.1327 , நாள்.31–12–2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**15.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.**25** ராமமூர்த்தி லே அவுட்டில் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் மற்றும் ஆள்நுழைவு தொட்டி இல்லாததால், பொதுமக்கள் பாதாள சாக்கடை இணைப்பு எடுக்க இயலாததால் அப்பகுதி கழிவுநீர் வெளியேற வழிவகை இல்லை. எனவே, பொதுமக்கள் மற்றும் பொதுசுகாதார நலன் கருதி பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் ஆள்நுழைவு தொட்டி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**1.80** இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்காணும் செலவினம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(9546/2018/இ3)**

<u>தீர்மான எண்.1328 , நாள்.31–12–2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**16.** இந்நகராட்சியின் பழைய நகராட்சி அலுவலகம் செயல்பட்டு வந்த வார்டு எண்.14, நாயக்கன் தோப்பு பகுதியில் நுண்உர செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைத்திட தேர்வு செய்து பணி தவங்க மேற்படி இடத்தில் ஏற்கனவே உள்ள பழைய கட்டிட RCC பாகங்களை இடித்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமானபடியால் திட்டப் பணியின் அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15–ன் கீழ் பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினம் ரூ.1,60,560/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கியதையும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(7590/2018/இ1)**

<u>தீர்மான எண்.1329 , நாள்.31–12–2018</u>

பதிவு செய்யப்படுகிறது.

**17.** இந்நகராட்சியில் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அந்தந்தப் பகுதியில் சேகரமாகும் தினசரி மக்கும் குப்பைகளை அதே பகுதியில் நுண்உர செயலாக்க மையம் (Onsite Compost Centre) அமைக்கும் விதமாக பானாம்பட்டு பகுதியில் புதிய மையம் அமைக்கப்பட்டு நகராட்சி சட்ட விதி 15–ன் செலவினம் ரூ.1,65,436/– வழங்கியதையும், நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(5710/2018/இ1)**

<u>தீர்மான எண்.1330 , நாள்.31–12–2018</u>

பதிவு செய்யப்படுகிறது.

**18.** இந்நகராட்சியில் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அந்தந்தப் பகுதியில் சேகரமாகும் குப்பைகளை அதே பகுதியில் உரமாக்கிடும் (Onsite Compost Centre) மையம் அமைக்கும் திட்டத்தில் சித்ரா லே அவுட் பகுதியில் அமைத்து நகராட்சி சட்ட விதி 15–ன் பணி ஆணை வழங்கியதையும் பணிக்கான செலவினம் ரூ.1,83,025/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(5712/2018/இ1)**

<u>தீர்மான எண்.1331 , நாள்.31–12–2018</u>

பதிவு செய்யப்படுகிறது.

**19.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்30, ஊரல்கரைமேடு தெருவில் திறந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகாலில் (பகுதி) மூடி போட (Cover Slab) மதிப்பீடு ரூ.3.30 இலட்சத்திற்கு

தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **11.12.2018** அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் (1) | ஒப்பந்ததாரர் பெயர் (ம) விபரம் (2) | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (3) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (4) |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | 2,87,249– | –0.15% குறைவு |
| 2 | திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | 2,93,975– | 2.19%அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.15%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(9132/2018/இ1)**

<u>**தீர்மான எண்.1332 , நாள்.31–12–2018**</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**20.** இந்நகராட்சிப் பகுதியில் கடந்த மூன்று மாதங்கள் பெய்த பருவமழை தாக்கத்தால் நகராட்சி சாலைகளில் ஏற்பட்ட பள்ளங்களை (Pot Holes) சரி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**13089/2018/E3**, நாள்.**12.11.2018–ல்** அறிவுறுத்தியதின் பேரில் மதிப்பீடு ரூ.**3.50** இலட்சத்திற்கு தயார் செய்து தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி **11.12.2018–ல்** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் (1) | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) விபரம் (2) | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (3) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (4) |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | 3,04,788– | –0.19% குறைவு |
| 2 | திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | 3,09,857– | 1.47%அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.19%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(9019/2018/இ1)**

<u>**தீர்மான எண்.1333 , நாள்.31–12–2018**</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**21.** இந்நகராட்சியின் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் மக்கும் குப்பைகள் உரமாக்கும் மையம் (Onsite Compost Centre) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட மையத்தில் அன்னியர்கள் உள்ளே வருவதை தடுக்கும் விதமாக இரும்பு முள்கம்பி வேலி மற்றும் மையத்திற்கு தண்ணீர் வசதி அலுவலக அறை அமைக்க மதிப்பீடு ரூ.**2.30** இலட்சத்திற்கு தனி அலுவலர் **14.11.2018–ல்** முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து,

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **11.12.2018** அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண் (1)** | **ஒப்பந்ததாரர் பெயர் (ம) விபரம் (2)** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (3)** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (4)** |
|---|---|---|---|
| 1 | திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | 2,25,028– | –0.21% குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | 2,28,027– | 1.12%அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.ரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.21% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(9131/2018/இ1)**

<u>தீர்மான எண்.1334 , நாள்.31–12–2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**22.** இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே உரமாக்கும் விதமாக 4 இடங்களில் (Onsite Compost Centre) நுண்உர மையங்கள் அமைக்க மதிப்பீடு ரூ.5.70 இலட்சத்திற்கு தனி அலுவலர் 07.11.2018–ல் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 14.12.2018 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண் (1)** | **ஒப்பந்ததாரர் பெயர் (ம) விபரம் (2)** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (3)** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (4)** |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரர். | 4,97,149– | –0.05% குறைவு |
| 2 | திருமதி.T.சந்தியா, ஒப்பந்ததாரர். | 5,03,010– | 1.12%அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.சிவகாமி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(8978/2018/இ1)**

<u>தீர்மான எண்.1335, நாள்.31–12–2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**23.** இந்நகராட்சியின் 2018–2019–ம் ஆண்டிற்கு 1 முதல் 42 வார்டுகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரிவசூலினை தீவிரப்படுத்தவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வரி தொகையினை செலுத்தக்கோரும் விளம்பர அறிவிப்பினை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளில் ஆட்டோவில் மைக்செட் நிறுவி ஒலிபெருக்கி மூலம் 26–12.2018 முதல் 31–03–2019 வரை ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களை தவிர வருவாய் பிரிவு அலுவலர்கள் தெரிவிக்கும் நாட்களில் மட்டுமே விளம்பரம் செய்யப்பட வேண்டிய வார்டுகளில் விளம்பரம் செய்வதற்க்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று 24–12–2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விவரம் | விலை விகிதிம் ஒரு நாளைக்கு ரூ. |
|---|---|---|
| 1 | M/s.அம்மன் சவுண்ட் சர்வீஸ், எண்.26, கே.கே.ரோடு, விழுப்புரம். | 1800 |
| 2 | M/s.டி.மோகன் சவுண்ட் சர்வீஸ், எண்.142—டி, திரு.வி.க. வீதி, விழுப்புரம். | 1900 |
| 3 | M/s.ஒலி ஒலி சிவா சவுண்ட் சிஸ்டம், எண்.1, பார்த்தசாரதி லே—அவுட், கே.கே.ரோடு, விழுப்புரம். | 1950 |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1—ல் கண்டுள்ள M/s.அம்மன் சவுண்ட் சர்வீஸ், எண்.26, கே.கே.ரோடு, விழுப்புரம் என்பவர் நாள் ஒன்றுக்கு ரூ.1800/— வீதம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவீனம் ரூ.1,62,000/— வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் அதனை தொடர்ந்து குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s.அம்மன் சவுண்ட் சர்வீஸ், எண்.26, கே.கே.ரோடு, விழுப்புரம் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மான எண்.1336, நாள்.31—12—2018</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

**24.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.2, சேர்மன் கோவிந்தராஜ் தெரு கதவு எண்.1, 1/1, 1/2, 1/3, 1/4, 1/5, 1/6, 1/7, 1/8, 1/9, 1/10, 1/11 மற்றும் 1/எ ஆகிய 13 வீடுகளுக்கு சொத்து வரி விதிப்பு செய்ததை ஆட்சேபம் செய்து திரு.A.குபேரன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.No.16552/2003—ல் வழக்கு தொடர்ந்தார். மேற்கண்ட 13 வரிவிதிப்புகளுக்கும் 2000—2001—க்கு முன்பான நிலுவை வரியினை தள்ளுபடி செய்தும் அதன் பின் உள்ள சொத்துவரித் தொகையினை வசூல் செய்யவும் சென்னை உயர்நீதிமன்றம் 10.02.2017—ல் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட 13 வரிவிதிப்பு எண்களின் 11 வரிவிதிப்பு எண்களுக்கு ரூ.42752/—ஐ தள்ளுபடி செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.890, நாள்.30—05—2018—ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு வரிவிதிப்பு எண்களையும் தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிவிதிப்பு எண் | ஆண்டு | தொகை |
|---|---|---|
| 044/9432 | 2001—2002 | 1336 |
| | 2002—2003 | 1336 |
| 044/9433 | 2000—2001 | 2376 |
| | 2001—2002 | 2376 |
| | 2002—2003 | 2376 |
| மொத்தம் | | 9800 |

<u>அலுவலக குறிப்பு:—</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வழக்கு நடைபெற்ற நிலையில் வாதி செலுத்தி வரித்தொகை 1993—94—ல் வரவெகுக்கப்பட்ட தொகை ரூ. /—ஐ 2000—2001—க்கு தீர்ப்பாணைப்படி வரவெடுக்கவும், 2000—2001—க்கு முன்னர் உள்ள நிலுவையை கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தள்ளுபடி செய்ய நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6596/2003/அ2)

**தீர்மான எண்.1337, நாள்.31–12–2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**25.** விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.37 ஏரிக்கரையில் கட்டப்பட்டுள்ள சமுதாய கழிவறைக்கு தண்ணீர் வசதி இல்லாததால் கழிவறை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு அப்பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**1.10** இலட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களது முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(10461/2018/இ2)

**தீர்மான எண்.1338, நாள்.31–12–2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**26.** இந்நகராட்சி கணினி பிரிவில் இயங்கி வரும் Canon IR2202N ஜெராக்ஸ் மிஷின் பாகங்களில் பழுதடைந்துள்ளதால் **23–11–2018** அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனம் | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | Excite Inc, Pondicherry | Bushing -2 & Fixing Gear-3 | 2400.00 |
| 2. | Syscon System, Pondicherry | | 2500.00 |
| 3. | GEM Computer, Pondicherry | | 3100.00 |

வரப்பெற்ற மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.**1**–ல் கண்ட M/s. Excite Inc, Pondicherry அவர்களின் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி M/s. Excite Inc, Pondicherry என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவினை வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1339, நாள்.31–12–2018**

அனுமதி வழங்கப்படுகிறது.

**27.** இந்நகராட்சியின் வார்டு எண்.**40**, மகாராஜபுரம் TNHB வீட்டுவசதி வாரியம் மாரியம்மன் கோயில் தெரு முதல் **40** அடி பிரதான சாலை வரை ரூ.**6.30** இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு தனி அலுவலர் **05.11.2018**–ல் முன்அனுமதி வழங்கியதையடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **04.12.2018** அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.ரத்தினசபாபதி, | 555175.00 | 1.04% அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்ததாரர். | | |
| 2 | திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரர். | 548804.50 | 0.11% குறைவு |

<u>அலுவலக குறிப்பு:—</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.K.லலிதா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.11% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

(9018/2018/இ1)

<u>தீர்மான எண்.1340, நாள்.31—12—2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

**28.** இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2017—18 பணிகள் சிப்பம்—I—ல் ரூ.147.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திருமதி.R.சிவகாமி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4.33% கூடுதலாக விலை விகிதம் கொடுத்ததை ஏற்று ரூ.147.70 இலட்சத்திற்கு பணி ஆணை 19.02.2018—ல் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | முதல் மற்றும் பகுதி பட்டியல் | — | ரூ.27,11,783— |
| 2) | இரண்டு மற்றும் பகுதி பட்டியல் | — | ரூ.37,33,369— |
| 3) | மூன்று மற்றும் பகுதி பட்டியல் | — | ரூ.24,90,505— |
| | வழங்கப்பட்ட தொகை | — | ரூ.89,35,657— |
| 4) | நான்கு மற்றும் இறுதி பட்டியல் | — | ரூ.53,74,609— |
| | ஆக மொத்தம் | — | ரூ.1,43,10,266— |
| | ஒப்பந்த தொகை | — | ரூ.1,30,51,663— |
| | வித்தியாசத் தொகை | — | ரூ.12,58,603— |

ரூ.12,58,603/— (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுநூற்று மூன்று மட்டும்) மேற்படி செலவினத் தொகைக்கு, சாலைப் பணிகள் நடைபெற்ற சமயம் அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சாலையினை நீள அகலம் கூடுதலாக அமைக்கப்பட வேண்டிய நிலையால் பணி கூடுதலாக மேற்கொள்ளப்பட்டதால் செலவினம் ரூ.12,58,603/— ஏற்பட்டது. மேற்கண்ட செலவினத் தொகை மதிப்பீட்டுக்கு மிகாமல் மதிப்பீட்டுக்குள் இருப்பதால் கூடுதல் தொகை ரூ.12,58,603/—ஐ திட்டத் தொகையிலேயே வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(571/2017/இ1)

<u>தீர்மான எண்.1341, நாள்.31—12—2018</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

